அடையாள இலக்கம்

அகில அவுஸ்திரேலியா, நியூசிலாந்து
தமிழ் ஊக்குவிப்புப் போட்டிகள் - 2012

அவுஸ்திரேலியா பட்டதாரிகள் தமிழர் சங்கம்
Tamil Competition - Australian Society of Graduate Tamils

# எழுத்தறிவுப் போட்டி

## இளைஞர் பிரிவு
(13-18) வயதுப் பிரிவு)

காலம்: பி.ப. 2.30 மணி, ஞயிற்றுக்கிழமை

நேரம் : 1:00 மணி

பரீட்சைத் தாளை வாசிக்க மேலதிக 10 நிமிடங்கள் வழங்கப்படும்

| | |
|---|---|
| மொத்தப்புள்ளிகள் | |

## மேற்பிரிவு 2012

**பகுதி 1**

1) பின்வரும் சொற்களை அவற்றின் பொருள் விளங்கும்படி வாக்கியங்களில் அமைக்குக.— (10 **புள்ளிகள்**)

அ) இளை ........................................................................................................................................

........................................................................................................................................

இழை ........................................................................................................................................

........................................................................................................................................

ஆ) குழவி ........................................................................................................................................

........................................................................................................................................

குளவி ........................................................................................................................................

........................................................................................................................................

இ) மரை........................................................................................................................................

........................................................................................................................................

மறை........................................................................................................................................

........................................................................................................................................

ஈ) திரை........................................................................................................................................

........................................................................................................................................

திறை........................................................................................................................................

........................................................................................................................................

உ) அளி........................................................................................................................................

........................................................................................................................................

அழி........................................................................................................................................

........................................................................................................................................

| புள்ளிகள் | |
|---|---|

2) கீழே தரப்பட்ட சொற்களைச் சேர்த்து எழுதுக.- (புள்ளிகள் 5 × 1 = 5)

அ) யாண்டு + சென்றான் -.................................

ஆ) காடு + அரண் -...........................................

இ) பொன் + தகடு -...........................................

ஈ) மரம் + அடி-..............................................

உ) பலா + இலை-.........................................

| புள்ளிகள் | |
|---|---|

3) கீழே தரப்பட்ட சொற்களைப் பிரித்து எழுதுக.- (புள்ளிகள் 5 × 1 = 5)

அ) எவ்வரசன் --------------- + ----------------

ஆ) பல்கலை ---------------- + -----------------

இ) காவடியாட்டம்--------------- + -----------------

ஈ) தேங்குடம் ------------------ + -------------------

உ) வாட்படை ------------------ + -------------------

| புள்ளிகள் | |
|---|---|

4) கோடிட்ட இடங்களைப் பொருத்தமான சொற்களால் நிரப்பிப் பழமொழிகளைப் பூர்த்தி செய்க- (புள்ளிகள் 5 × 2 = 10)

அ) அச்சாணி இல்லாத தேர் ---------- -------------

ஆ) எரிகிறது விளக்கானாலும் -------------. ------------------. -------------- வேண்டும்.

இ) பட்ட காலிலே ----------- கெட்ட -------------------- ---------------------.

ஈ) கங்கையில் மூழ்கினாலும் ---------------- -----------------------?

உ) வாழும் பிள்ளையை --------------------- ---------------------

1) கீழே தரப்பட்ட வாக்கியங்களில் உள்ள பிழைகளைத் திருத்தி எழுதுக. (புள்ளிகள் - 3 × 5 = 15)

அ) இந்த வருஷம் மளை பெய்யாததால் விழைச்சல் குறைவாக இருந்தது.

------------------------------------------------------------------------------------------------------------------------

------------------------------------------------------------------------------------------------------------------------

ஆ) என்ரை புதிய இல்லத்தின் கிரகப் பிரவேசத்திற்கு வந்த சில பெரியவர்கள் நாங்கள் அழித்த அருசுவை உணவை நன்றாகத் தின்றார்கள்.

---------------------------------------------------------------------------------------------------------------------------

---------------------------------------------------------------------------------------------------------------------------

இ) நானும் நாய்க்குட்டியும் தோட்டத்தில் நின்றதைக் கண்ட ராமன் சந்தோஷமாகப் பாடிக்கொண்டு ஓடிவந்தான்.

---------------------------------------------------------------------------------------------------------------------------

---------------------------------------------------------------------------------------------------------------------------

| புள்ளிகள் | |
|---|---|

**5) கீழே கேட்கப்பட்ட கேள்விகளுக்குச் சரியான விடைகளை எழுதுக.**
(புள்ளிகள் - 5×1 = 5)

அ) நகை அழுகை இளிவரல் மருட்கை அச்சம் பெருமிதம் வெகுளி உவகை சாந்தம் ஆகியவற்றைக் குறிக்கும் சொல் என்ன? ............................

ஆ) ஐந்திலக்கணம் என்றால் என்ன? ..........................................

..........................................................................................

இ) ஒரே சமயத்தில் பதினாறு விடயங்களை அவதானிக்கும் ஆற்றலுடையவனை எப்படி அழைப்பது?...................................................................

ஈ) ஒரு நிகழ்ச்சியைப் பலரும் பார்ப்பதற்கு முன்னர் பரிசோதித்துப் பார்ப்பதை எப்படிக் கூறுவது? ......................................................................

உ) பிறர் அறியாதவண்ணம் ஒருவருக்கு மிகவும் துணையாய் உதவிசெய்பவரை எப்படி அழைப்பீர்கள்?...................................................................

| புள்ளிகள் | |
|---|---|

<u>பகுதி 2</u>

**வினாக்களுக்குரிய விடைகளைக் கொடுக்கப்பட்ட தாள்களில் எழுதுக.**

**அ) கீழே தரப்பட்ட பந்தியை வாசித்தபின் கேட்கப்பட்ட வினாக்களுக்குச் சரியான பதில்களை எழுதவும்**

(புள்ளிகள் - 5 × 5 = 25)

கல்வி நமக்குப் பல நன்மைகளைத் தருகிறது. கல்வியினால் நம் அறிவு வளர்கிறது. கல்வியினால் நாம் தொழில் பெறுகிறோம். கற்றவர்களை உலகம் மதிக்கிறது. எல்லாவற்றிலும் மேலாகக் கல்வி நமக்குக் கடவுள் உண்மையை அறிவுறுத்தி, நாம் கடவுளை அறியத் துணைசெய்கிறது. கடவுளை வணங்கத் துணை செய்யாத கல்வி சிறந்த கல்வி ஆகாது.

"கற்றதனாலாய பயனென்கொல் வாலறிவன்

நற்றாள் தொழா அர் எனின்" என்பர் திருவள்ளுவர். கல்வியின் மூலம் கடவுளின் குணவிசேடங்களையும், அவரை அன்புசெய்யும் முறைகளையும், அவரை அடைந்தோர் வரலாறுகளையும் அறிகிறோம். அவ்வாறு அறிவதனால் நமக்கும் கடவுளிடத்தில் அன்பு உண்டாகின்றது. அவ்வன்பு கடவுட்பணியில் நம்மை ஈடுபடுத்துகின்றது. கடவுட்கொள்கை இல்லாதவர்கள், கல்வியினால் கடவுள் நம்பிக்கையைப் பெறுகிறார்கள். கடவுட் கொள்கை உள்ளவர்கள், கல்வியினால் சமய வாழ்வில் ஊக்கம் அடைகின்றார்கள்.

கல்வியைப் போலவே, கடவுட் கொள்கையைப் பெறுதற்கும் இளமைப் பருவமே ஏற்ற காலமாகும். இளமையிற் பழகிய பழக்கங்கள் எக்காலத்தும் நிலைத்து நிற்கும். "தொட்டிலிற் பூண்ட குணம் சுடுகாடு மட்டும்". ஆதலினால், நமது பழக்க வழக்கங்களைச் சிறு வயதிலேயே திருந்தியனவாகக் கற்றுக்கொள்ள வேண்டும். கடவுள் நம்பிக்கையையும் கடவுள் தொண்டையும் இளமையிலே போதித்தால், அஃது ஒருவரது வாழ்க்கை முழுவதும் கலந்து நிற்கும். வாழைப்பழத்தில் இலகுவாக ஊசி ஏற்றுதல் போலச் சிறுவர் மனத்திலும் கடவுள் நம்பிக்கை நன்கு பதியும். அவ்வாறே நற்பழக்கங்களையும் இளமையிலேயே பழகிக்கொள்ளுதல் எளிதான காரியமாகும். இளமையிற் கற்றுக்கொள்ளாது வயது வந்தபின் நற்பழக்கங்களை மேற்கொள்ளலாமெனல் பொருந்தாது.

இன்று தலைவர்களென்றும் மகாத்மாக்கள் என்றும் நாம் போற்றுகின்றவர்கள், தம் இளமைப் பருவத்திலேயே பெருமைக்குரிய நற்பண்புகளையும் கல்வியையும் பெற்றிருந்தார்கள் என அறிகிறோம். சுவாமி விவேகானந்தர் இளம் பிராயத்திலேயே மன அடக்கத்தைக் கற்றுக்கொண்டார். தனியிடத்தில் இருந்து நீண்ட நேரமாகத் தியானம் செய்யும் பழக்கத்தை அவர் இளமை முதலே மேற்கொண்டார் என அறிகிறோம். மன அடக்கப் பயிற்சியின் பயனாகக் கல்லூரியிலுள்ள உயர்ந்த கல்வியும் அவர்க்கு மிக இலகுவாய் இருந்தது. நம் காலத்தில் வாழ்ந்த காந்தி அடிகளை நோக்குவோம். அவர் இறக்கும் வரையும் கடவுளை அன்பு செய்தார். அவரது வாழ்நாளில் பிரார்த்தனை செய்யாத நாளே இல்லை. அவ்வித சிறந்த பண்பு அவர் எப்பொழுது பெற்றார்?. எவ்வாறு கற்றார்?. அவர் மண்விளையாடி மகிழும் நாள்களில் இராமநாமத்தின் பெருமையை அறிந்தார். கள்ளங்கபடமற்ற அவரது வெள்ளை உள்ளத்தில் விதைத்த வித்து நாடோறும் வளர்ந்து அவர் வாழ்வோடு மலர்ந்து பெரும்பயன் தருவதாயிற்று. இவர்களைப் போலவே உலகில் பல பெரியார்கள் தம் இளமைப்பருவத்தில் அறிந்தும் அறியாமலும் கற்றுக்கொண்ட நற்பண்புகளே அவர்களைப் பிற்காலத்தில் உயர்த்தி வைத்தன.

சமயக்கல்வி கடவுளுணர்ச்சியை வளர்த்தலோடு நல்வாழ்வு வாழவும் துணைசெய்கிறது. சமய வாழ்வு வாழ்வதனால் இரு நன்மைகள் உள்ளன. ஒன்று தன்னைப் பற்றியது. மற்றது பிறரை அல்லது சமூகத்தைப் பற்றியது. சமயக் கல்வி ஒருவனைத் தூயவனாக்கி நற்கதியடையச் செய்கிறது. தூயவனாவதனால் அவன் தீயசெயல்களை விட்டுவிடுகிறான்.

கொலை, களவு, பொய் முதலியனவாகத் தனக்கும் பிறருக்கும் தீமைபயக்கும் செயல்களை அவன் வெறுக்கிறான். இவ்வாறு சமயக் கல்வி ஒவ்வொருவனையும் தூயவனாக்கி உயர்ந்த சமூக வாழ்வமைக்க உதவுகிறது. ஒவ்வொருவனும் கடவுளை நேசிப்பது போலவே பிற உயிர்களையும் நேசிப்பான். சமயக் கல்வியினால் தன்னலத்தை விடப் பிறர் நலத்தைப் பேணும் பெரும் பண்பு மக்களிடை வளரும். தியாக சிந்தை எல்லோருக்கும் உண்டாகும். இவ்வித உயர் குணங்களைப் பெருக்கிச் சிறந்த வாழ்வுக்கு மக்களை அழைத்துச் செல்வது சமயக் கல்வியேயாகும்

வினானக்கள்

1) சமயக் கல்வி ஒருவனுக்கு எவ்விதம் உதவுகிறது?.
   சமயக்கல்வி பற்றித் திருவள்ளுவர் என்ன அறிவுறுத்துகிறார்?.

2) சிறுவயதிற் பழகிய பழக்கங்கள் எக்காலத்தும் நிலைத்து நிற்கும் என்னும் கருத்தைப் பிரதிபலிக்கும் பழமொழி ஒன்று உண்டு. அது என்ன?
3) எந்தக் காலத்திலே கல்வி மற்றும் சமய அறிவுகளை வளர்க்க வேண்டும்? ஏன்?.
4) சுவாமி விவேகானந்தரின் உயர்வுக்கு எவை உதவின?
5) உங்களுக்குத் தெரிந்த வேறொரு உலகத் தலைவர் உயர்வுக்குக் காரணம் கூறவும்.

| புள்ளிகள் | |
|---|---|

**ஆ) கீழே தரப்பட்ட தலைப்புகளில் ஒன்றைப்பற்றி 250 சொற்களுக்குக் குறையாத கட்டுரை ஒன்றை வரைக.** (புள்ளிகள் - 25)

**அ) "தமிழ் ஈழத்தில் அண்மையில் ஏற்பட்ட போரின் விளைவால் அனாதைகளாக்கப்பட்ட பிள்ளைகளின் எதிர்காலம் நன்றாக அமைய எடுக்கப்படவேண்டிய செயற்திட்டங்கள்"**

**ஆ) "அவுஸ்திரேலியாவில் தமிழின் வளர்ச்சியும் அதன் எதிர் காலமும்"**

| புள்ளிகள் | |
|---|---|